**செய்தி வெளியீடு எண்: 802**

## செய்தி வெளியீடு –9.12.2007

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் உலக மனித உரிமை நாள் செய்தி

**ஆண்டுதோறும் டிசம்பர்த் திங்கள் 10ஆம் நாள், 'உலக மனித உரிமை நாள்' எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.**

**சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளும், ஆண், பெண் எனும் பால் வேறுபாடுகளுமின்றி நமது அரசியல் அமைப்புச் சட்டம் அளிக்கும் அடிப்படை உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரத்துடன், சமத்துவத்துடன், கண்ணியத்துடன் வாழ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தும் நாள் 'உலக மனித உரிமை நாள்'.**

**இந்நாள் நலிந்தோர்க்கும், மெலிந்தோர்க்கும் பாதுகாப்பு உணர்வை நல்கிடும் நாள்!**

**வலிமை மிகுதியால் எளியோரை வருத்தி வஞ்சகம் புரிவோரைச் சிந்திக்கச் செய்திடும் நாள்!**

**இந்நாளில், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்!' எனும் சங்கத் தமிழ்ப் புலவன் தந்த பொதுநோக்குச் சிந்தனையைப் புதுப்பிப்போம்!.**

> **'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
> **மாணா செய்யாமை தலை'**
>
> **'எவ்வளவிலும், எப்பொழுதும், எவரையும் இழிவுபடுத்தும் செயலை மனத்தால் கூட நினைக்காமல் இருப்பதே முதன்மையான சிறப்பாகும்'.**

**–என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளும், அதுதரும் பொருளும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இயல்பாய்க் கிளர்ந்தெழுந்து மனிதனை மனிதனாய் மதிக்கும் மனித நேயம் வளர்ப்போம் என உறுதியேற்போமாக!.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.